
மகிழ்

Magizh Tamil Magazine

4.2.2017



அனுக்ரஹம் 3
படிக்காத மேதை 5
முகநக நட்பு 7
108 9
அகக்கண் 12
துணுக்குகள் 15
தாராளவாதிகளின் போலி நிலைப்பாடு 17
என் சாட்சி எடுபடுமா? 19
ஹாஸ்யம் 24
கவிதை 25

அனுக்ரஹம்



பழைய நூல்களில் ஆரிய, திராவிட (அல்லது தமிழ்) என்று வருகிற இடங்களில் இந்த இரண்டும் வேறு வேறு ரேஸ்களைக் குறிப்பதாகக் கொள்வதற்கு இடமே இல்லை. ஒன்றேயான பாரதீய ஜன ஸமூகத்திலேயேதான் பாஷைகளை வைத்து – ரேஸை வைத்து அல்ல – பஞ்ச கௌடர்கள், பஞ்ச திராவிடர்கள் என்றும் பத்து பாஷைகளைப் பேசுபவர்களாகப் பாகுபாடு செய்திருந்தார்கள்.

இந்தப் பிரிவினைக்காரர்களின் கொள்கைப்படியே, ஒரே Dravidian stock – ஐச் சேர்ந்தவைதான் தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய மூன்றும். ஆனாலும், தமிழர்கள், தெலுங்கர்கள், கன்னடர்கள் இவர்களுக்கிடையில் சம்பிரதாயங்களில் எத்தனை வித்தியாஸங்கள் ஏற்பட்டு ஒன்றொன்றும் கிளை மரபை உண்டாக்கியிருக்கிறது? தமிழிலிருந்து தோன்றியது மலையாளம். அப்படியிருந்தும் கேரளீய கலாசாரம் தமிழ் மரபுகளுக்கு வித்தியாசமாக ஏற்பட்டில்லையா? இப்படித்தான்

ஸநாதன தர்ம விருக்ஷம் என்கிற ஒரே தாய் மரத்தில் ஸம்ஸ்கிருதத்தை base ஆகவும், தமிழை base ஆகவும் கொண்டு இரண்டு கிளைகள் பிரிந்தன. பிரிந்தாலும் முழுக்க வேறல்ல; வேர் ஒன்றுதான், அடிமரம் ஒன்றுதான் என்பதை மறக்காமல் அன்பில் இணைந்து பரஸ்பரம் வளர்ந்திருக்கின்றன. ராஜராஜன் முதலான தமிழ் அரசர்கள் இந்த வளர்ச்சிக்கே வளம் கொடுத்தவர்கள்.

வெள்ளைக்கார அரசாட்சி வந்தபின்தான் divide and rule – 'பிரித்து ஆள்வது' என்கிறார்களே – அந்தக் கொள்கைப்படி சாமர்த்தியம் செய்து, வேதத்தில் கெட்ட சக்திகளாகச் சொல்லியுள்ள தஸ்யுவிலிருந்து ஆரம்பித்து, ராமர் சண்டை போட்ட ராவணன், ஸுப்ரமண்யர் சண்டை போட்ட சூரபத்மாஸுரன் என்றிப்படி எவரை எடுத்துக்கொண்டாலும் அவர்கள் ஆரிய ரேஸுக்கு விரோதமான திராவிட ரேஸ் என்று நன்றாகக் கட்டிவிட்டார்கள், இந்த அபிப்ராயத்தை குழந்தைகள் ஸ்கூலில் படிக்கிறபோதே பாடமாக இன்ஜெக்ட் பண்ணிவிட்டார்கள். ஒரு premise-ஐ (அடிப்படைக் கருத்தை) ஒப்புக் கொண்டுவிட்டால் அப்புறம் எல்லாம் அதற்கு ஸாதகமாகவும் அநுகூலமாகவுமே தெரியும். அப்படித்தான் இப்போது நம்மவர்களே 'இரண்டு ரேஸ் தியரி'யைக் கேள்வி கேட்காமல் basic-ஆக ஒப்புக்கொண்டுவிட்டதால் நம்மவர்களுக்கே எதை எடுத்தாலும் இதற்கு அத்தாட்சி கிடைப்பதாகத் தோன்றுகிறது! இதுதான் ஸநாதனிகளை 'ஸுபர்ஸ்டீஷியஸ்' (குருட்டு நம்பிக்கைக்காரர்கள்) என்று பரிஹஸிக்கிற இன்றைய அறிஞர்கள், பகுத்தறிவுவாதிகள் ஆகியவர்களுடைய பெரிய 'ஸுபர்ஸ்டிஷ்'னாக இருக்கிறது.

- தெய்வத்தின் குரல்

படிக்காத மேதை



“ஏனுங்க உங்க வீட்ட ஒட்டி கொஞ்சம் இடமிருக்குதில்லீங்க...? அதில நான் ஒரு மரம் வளர்த்துத் தரட்டுங்களா...?”

என்று திருப்பூர் அம்மாபாளையம் பகுதியில் ஒவ்வொரு வீடாகப் போய் கேட்டு அவர்கள் வீட்டின் அருகிலேயே ஒரு மரம் நட்டு வளர்த்து வருகிறார்.

பால் வரும் மரம் தானுங்க நிறைய பிராண வாயு தரும். முடிஞ்ச மட்டும் அத வளர்க்கலாம்ங்க... ஆனால், வேர் அதிகம் விடுங்குறதால வீட்டுப் பக்கம் நட முடியாதுங்க என்று சொல்லும் இவர், திரு. வேலுச்சாமி ஐயா வயது 77.

தெரு/சந்தின் ஓரத்தில் மரம் நட்டால், அது மேலே போகும் மின்சாரக் கம்பிக்கு இடைஞ்சலாக இருக்கும் என்று, அதை வளைந்து வளரச் செய்து, பிறகு அது தெருவிற்கு இடைஞ்சலாகிவிடக் கூடாது என்று மீண்டும் மரத்தை நேரே வளரச் செய்து விடுகிறார். (படங்களைப் பாருங்கள்).

தன் வீட்டை ஒட்டி இருக்கும் 4 செண்ட் இடத்தை ஒரு சின்ன காடு போல மாற்றியிருக்கிறார்.

கொஞ்சம் தள்ளி இருக்கும் இரண்டரை செண்ட் வீட்டடி மனையில் ஆமணக்கு, முருங்கை, பப்பாளி, கீரைகள், பூசணி போன்ற கொடிகள், அகத்தி, தட்டைப்பயறு, புன்னை மரம், வேம்பு இன்னும் என்னென்னவோ....

இவ்வளவும் இத்துணூண்டு இடத்தில் வளருமா ஐயா?
“ஒரு செடி இன்னொரு செடியைச் சார்ந்தே இருக்கிற மாதிரி போட்டால் ஒன்னுக்கொன்னு ஆதரவா எல்லாம் நிறைய மகசூல் கொடுக்குமுங்க” என்று புரிய வைக்கிறார்.

பலாப்பழத்தின் தோலை ஒரு வாளியில் போட்டு ஊற வைத்திருந்தார். அது நல்லா ஊறி மக்கிப் போனால் மண்புழு விரும்பி உண்ணுமாம். ஒவ்வொன்றைப் பற்றியும் அவரின் அனுபவம் மிளிர்கிறது.

இவர்கள் இருக்கும் பகுதியில் இருக்கும் ஒரு சின்னக் கோவிலின் வாசலில் ஒரு மரம் நட்டு வளர்க்கத் தொடங்கியிருக்கிறார். அந்த ஏரியா வார்ட் மெம்பர் வந்து, இந்த ஏரியால ஒரு செண்ட் என்ன விலை தெரியுமா? மரம் நட வேற இடம் கிடைக்கலையான்னு புடுங்கிப் போட்டுட்டுப் போயிட்டார் என்று ரொம்ப வருத்தப் பட்டார்.

ஒரு தோட்டத்திற்குப் போகும் வழியில் ஏழெட்டு கீமீ தள்ளியிருந்த ஓர் ஆசிரமத்திற்குப் போக நேர்ந்தது. அங்கேயும் சாலையோரங்களில் நிறைய மரங்களை நட்டு வளர்த்து விட்டிருக்கிறார் இவர். அங்கே இருந்த சாமியார் (வயது முதிர்ந்தவர் தான்) இவரைப் பார்த்ததும் சந்தோசமாக ஓடி வந்து வாசலிலேயே இவர் கால் தொட்டு வணங்கினார். இவரோ...
“ஏனுங்க நான் படிக்காதவனுங்க. என் கால்ல எல்லாம் போயி”னு கூச்சத்தில் விலகி நின்றார்.

நான் மெதுவாகச் சொன்னேன் ஐயா,

“எந்த சாமிதான் பள்ளிக் கூடம் போயிருக்கு..?”

வேலுச்சாமி ஐயா நிறைந்த ஆரோக்கியத்துடன் நீண்ட ஆயுளைப் பெற இறைவனைப் பிராத்திப்போம்.

- ஆனந்தன் அமிர்தன்

https://tinyurl.com/j4nljs5

முகநக நட்பு



நண்பிகள் ராஜியும், லஷ்மியும், ரொம்ப வருடங்கள் கழித்து ஒரு mallலில் பார்த்துக் கொள்கிறார்கள்..

ராஜி: “ஹாய் லஷ்மி..! எங்கடி இங்க..? உன்னை பாத்ததேயில்லையே இங்கேல்லாம்..? நான் அரிசி புளி வாங்கணும்னா கூட இங்கதான் எப்பவும்..!”

லஷ்மி: “நான் இன்டர்னெட்ல ஆர்டர் பண்ணிடுவேன்..!.. எனக்கு கிருஷ் (அவள் கணவர் கிருஷ்ணசாமி) ஒரு லேப்டாப் வாங்கிக் குடுத்துடுத்து..! கிரெடிட் கார்ட் வெச்சு எல்லாம் நானே வாங்கிண்ட்ருவேன்.. ஆனா அதுக்கு இன்டர்னெட் பத்தியெல்லாம் தெரியணும்..!”

ராஜி: “விஷி (அவள் கண்வன் விஸ்வனாதன்) அடிக்கடி என்னை கூட்டுண்டு இந்த மாலுக்கு வந்துரும்..! இங்கதான் எல்லா ஷாப்பிங்கும்..! என்னால் வீட்ல கிடக்க முடியாதுப்பா..! அய்யய்யோ…! எப்டித்தான் சிலர் எப்பப் பாத்தாலும் வீட்லேயே அடைஞ்சு கிடக்றாளோன்னு தோணும்..!”

லஷ்மி: “என்னடி பண்றது..? கடவுள் எனக்கு ஒரு அதிபுத்திசாலியை பையனா குடுத்துட்டாரே..? JEE பிரிபேர் பண்ணிண்டிருக்கான்..! அதில்லாம ஹிந்தி ட்யூஷன், கிடார் கிளாஸ்னு அவன பாத்துக்கிறதுக்கே எனக்கு டைம் பத்தலை..! எல்லா பொறுப்பும் என் மேல..! நானும் பொறுப்பில்லாம ஜாலியா ஊரை சுத்தணும்தான் பாக்றேன்..! முடியுமோ...?"

ராஜி: “குழந்தைங்க Self-responsibilities எடுத்துக்கணும்னு விஷி எப்பவும் இன்ஸிஸ்ட் பண்ணும்…! ..அப்பதான் லைஃப்ல ஷைன் பண்ண முடியுமாம்..! இப்ப என் பொண்ணு வீடல படிச்சுண்டிருக்கா..! அவளாவே படிச்சிட்டு, பாட்டு கிளாஸ் போயிட்டு, அப்புறம், யோகா பண்ணிட்டு தூங்கும்..! நான் ஹெல்ப் பண்றேன் சொன்னாலும் கூடவே கூடாதுன்னும்..! அவ்ளோ சமத்து பாத்துக்கோயேன்..!”

லஷ்மி: “சரி… நான் கிளம்பறேண்டி..! வீட்ட கிளீன் பண்ணணும்.! புது ஃப்ளாட்..! 2000 ஸ்கொயர்ஃபீட்..! 2 கோடி குடுத்து வாங்கிட்டு கிளீனா வெச்சிக்கலன்னா எப்படி..?“

ராஜி: : “கொஞ்ச நாழி இருந்தியானா நாங்களே உன்னை டிராப் பண்ணுவோம்..! ரீசண்ட்டாதான் பழைய கார கொடுத்துட்டு புது ஸ்கோடா சூப்பர்ப் வாங்னோம்..!”

இருவரும் விடை பெற்று சென்று தம் தம் கணவர்களிடம் தம் தோழியை சந்தித்தது பற்றி சொல்லி, இப்படி, ஒரே மாதிரி, கூறினர்:

“இத்தன வருஷம் கழிச்சி பாக்றோமே.. 'எப்படி இருக்க..? நல்லா இருக்கியா..? வீட்ல அம்மா, அப்பா எல்லாரும் நல்லா இருக்காளா..?' இதெல்லாம் கேக்காம, தன்னோட பெருமை மட்டும் பேசிட்டு போறது..! என்ன ஜென்மங்களோ இதெல்லாம்..?”

- Shankar Rajarathnam

108



“பார்த்து ஓட்டுங்க, பழனிசார், நீங்க போற வேகத்தைப் பார்த்தா, நாம ரெண்டு பேரும் இன்னொரு ஆம்புலன்ஸில் போகவேண்டியிருக்கும் போலிருக்கே!”

வேலு சொன்னதைக் கேட்டு மெதுவாகச் சிரித்தான் பழனி. “அதென்னவோ தெரியலை வேலு, இந்தமாதிரி விபத்துன்னு ஃபோன் வந்து உதவிக்குப் போகும்பொழுது, ஏதோ என் சொந்தக்காரங்களே அடிபட்டுக்கிடப்பதுபோல் ஒரு படபடப்பு வந்துடுது. அதான் என்னையும் அறியாமல் வண்டி ரொம்ப வேகமெடுக்கிறது” என்றான்.

பழனி இந்த ஆம்புலன்ஸ் டிரைவராகி நான்கு வருடங்கள் இருக்கும். இதுவரை எத்தனையோ விபத்துக்களைப் பார்த்திருக்கிறான். ரத்தவெள்ளத்தில் இருக்கும் எத்தனையோ பேரை ஆம்புலன்ஸில் ஏற்றிப் போயிருக்கிறான். சாதாரணமாக இந்த மாதிரி வேலையில் இருப்பவர்களின் மனது மரத்துவிட்டிருக்கும்.

ஆனால் பழனியோ முதல் விபத்து நடந்த இடத்துக்கு விரைந்த அதே மனநிலையில்தான் ஒவ்வொரு முறை விபத்து நடந்த இடத்துக்குப் போகும்போதும் இருக்கிறான். அப்போதிருந்த அதே படபடப்பு, பதட்டம், உயிர்களைக் காப்பாற்றப்போகிறோம் என்ற உணர்ச்சி எல்லாம் இன்றுவரை மாறவேயில்லை. இப்பொழுதும் அதேமாதிரிதான் திருமங்கலம் அருகே விபத்து என்று அழைப்பு

வந்தவுடன் வண்டியை அவசரமாக அந்த இடத்திற்கு விரட்டிக் கொண்டிருக்கிறான். இன்னும் 5 கிலோமிட்டர் தூரம் போகவேண்டும். சைரனைப் போட்டப்படியே வண்டி பறந்து கொண்டிருந்தது. மற்ற எந்த வண்டியும் அருகில் இல்லை. சுற்றுவட்டாரத்தில் 20,25 கிலோமீட்டருக்கு அப்பால் அனுப்பப்பட்டிருந்தனர்.

விபத்து நடந்த இடத்திற்கு கொஞ்சம் அருகில் என்று பார்த்தால் பழனியின் வண்டி மட்டுமே இருந்ததால் அவனுக்கு அழைப்பு வந்து, போய்க்கொண்டிருக்கிறான்.

பழனியின் தந்தை, அவன் அம்மா வீட்டில் செய்து கொடுக்கும் தின்பண்டங்களை பாக்கெட் செய்து டிவிஎஸ்50யில் எடுத்துப்போய் மதுரையின் சுற்றுவட்டார கிராமங்களில் உள்ள கடைகளுக்கு விற்று வருவார்.

பழனி ப்ளஸ் 2 முடித்து ஒரு மெக்கானிக் பட்டறையில் சிறிதுகாலம் வேலையில் இருந்தான். பிறகுதான் டிரைவிங் லைசென்ஸ் எடுத்து, இரண்டு,மூன்று இடங்களில் வேலையில் இருந்து எதுவும் திருப்தியில்லாமல் இந்த வேலையில் சேர்ந்தான். தினம் பல கோர விபத்துக்களைப் பார்த்து மனம் அழுதாலும், அடிபட்டவர்களுக்கு உதவுவதில் ஒரு ஆத்மத் திருப்தி இருந்தது.

“ஆம்மாம், நீங்க எவ்வளவுதான் வேகமாகப் போனாலும் அங்க இருக்கற ஜனங்க நம்மளை குறைதான் சொல்றாங்க. காசு வாங்கிக்கிட்டு காய்க்கூடைங்களை, ஜனங்களை ஏத்திட்டுப் போறோம், விபத்து நடக்கற இடத்துக்குச் சீக்கிரமா வருதுல்லைன்னு சொல்றாங்க.”
“விடு. யாரோ சிலபேரு செய்யற தப்பு, நம்மள மாதிரி இருக்கறவங்களையும் பாதிக்கிறது”
என்று பழனி பதில் சொல்லிக்கொண்டிருக்கும்போதுதான் கண்ணிமைக்கும் நேரத்தில் அவர்கள் கண்ணெதிரே அது நிகழ்ந்தது.

இவர்கள் வந்துகொண்டிருந்த நான்குவழிச்சாலையின் மறுபக்கம் ஒரு பள்ளிவேனின் மீது குறுக்குச்சாலையில் வந்த ஒரு சொகுசுக்கார் மோதியதில் அந்த இடமே ஒரே கூக்குரலாக இருந்தது.

வேனில் இருந்த பள்ளிச்சிறுவர்களின் கதறல். அதிர்ந்த பழனி ஒரு நிமிடம் வண்டியை நிறுத்தினான். ஒரு தீர்மானத்துக்கு வந்தவன் போல் விபத்து நடந்த இடத்துக்கு வண்டியைச் செலுத்தினான். வேலு, “சார், நாம திருமங்கலம் கிட்டக்கப்போகணும்” என்றான்.
பழனி, பலமாகத் தலையசைத்து, “முதலில் கண்ணெதிரே கஷ்டப்படறவங்களுக்கு உதவுவோம். இந்தா, ஃபோன், இந்த இடத்துக்கு ஒரு ஆம்புலன்ஸ் போறாது. இன்னொன்று அனுப்பச்சொல்லி ஃபோன் பண்ணு.” என்றான்.

அவசரஅவசரமாக அடிபட்டக்குழந்தைகளை வண்டியில் ஏற்றிக்கொண்டனர். அருகிலிருக்கும் மருத்துவமனையில் கொண்டுச் சேர்த்தனர். எத்தனை அவசரமாகச் செய்தும் அரைமணிக்குமேல் ஆகிவிட்டது. பிறகு அங்கிருந்து திருமங்கலமருகே சென்றனர்.
சிறிது தூரம் இருக்கும்போதே அங்குள்ள நிலைமை இருவருக்கும் புரிந்துவிட்டது. ஒன்றும் செய்ய இயலாத நிலைமையில் கனத்த இதயத்துடன் பழனி வண்டியை நிறுத்தினான். மக்கள் கொந்தளிப்புடன் நிற்பதைப் பார்த்த வேலு மறுபக்கம் குதித்து ஓடினான்.

பழனி மட்டும் அந்த இடத்தை நெருங்கினான். சாலையில் தாறுமாறாகக் கிடந்த டிவிஎஸ் 50 யையும், அதனருகே சிதறிக்கிடந்த தின்பண்டப்பொட்டலங்களையும், இன்னும் கொஞ்சதூரத்தில் அடிப்பட்டுக்கிடந்தவரையும் பார்த்தான். அதற்குள் கோபாவேசமான ஜனங்கள் அவனைத் தாக்க ஆரம்பித்தனர். அவன் கண்ணில் நீர் வழிந்தோடியது. தாங்கள் அடிப்பதினால் வலி தாங்காமல் அவன் அழுகின்றான் என்று மேலும் கூட்டம் இன்னும் பலமாகத்தாக்கியது. தன் மேல் மேன்மேலும் அடிவிழுவதை உணராமல் அவன் தந்தைக்காக அழுதுகொண்டிருந்தான்.

- ஜெயசீதா

அகக்கண்



ஸுப்ரதோவிற்கு ஆயாசமாய் இருந்தது..
ஒரு மணி நேரத்துக்குள் பத்தாவது முறையாகக் கேட்கிறார்..

“மா..., ப்ளீஸ்..... கொஞ்சம் புரிந்து கொள்ளுங்கள்... நீங்களும் வர வேண்டுமென்று நினைத்ததால் தானே, இதோ திருப்பதி வரை உங்களையும் அழைத்து வந்து விட்டேன்....

கூட்டம் மிக அதிகமாக இருக்கும் என்று தெரியாமல் , இந்த மாதத்தில் உங்களையும் இவர்களையும் அழைத்து வந்து விட்டேன்... ஆன்லைனில் பதிவு பண்ணியிருந்தாலும், நிச்சயம் ஐந்தாறு மணி நேரம் ஆகும் என்கிறார்கள்... உங்களால் முடியாதம்மா..... ப்ளீஸ், ரூமிலே இருங்கள்... நாங்கள் தர்ஷன் முடித்து விட்டு வருகிறோம்..”

கமலி தேவியின் முக இறுக்கம் அதிகமாயிற்று...
“முடியாது.. பாலாஜி தர்ஷனுக்கு என கிளம்பி வந்தாச்சு.... தரிசனம் பண்ணாமல் திரும்ப மாட்டேன்... எவ்வளவு கஷ்டமாக இருந்தாலும் தாங்கிக் கொள்கிறேன்....”

ஸுப்ரதோவிற்கு டென்ஷன் அதிகமாகிற மாதிரி இருந்தது... எழுபத்தைந்து வயது தாயுடனும், மனைவி, இரண்டு பெண்

குழந்தைகளுடனும் முதல் முறையாக திருப்பதி வந்திருக்கிறார்... எதிர்பாராத கூட்டம், புரியாத மொழி...

இரண்டு கண்ணும் பார்வையில்லாவிட்டாலும் , பாலாஜியைப் பார்க்காமல் போகமாட்டேன் என்று அடம் பிடிக்கும் தாய்.

அந்த வங்காள நடுத்தரக் குடும்பத்தின் எட்டாவது குழந்தை அவர்...அவருடைய பத்து வயதிலேயே தாயின் இரு கண்களும் நிரந்தரமாகப் பார்வை இழந்து விட்டது... ஒரு நிதானத்திலேயே வீட்டுக்குள் புழங்குவார்... வெளியில் ஒரு அடி எடுத்துவைக்கவும் அடுத்தவர் துணை வேண்டும்...

மானேஜ்மென்ட் படிப்பை வெளிநாடுகளில் முடித்துவிட்டு, பன்னாட்டு நிறுவனத்தில், பெங்களூரில் தலைமை பொறுப்பிலிருக்கும் ஸுப்ரதோ, தாய் மற்றும் மனைவியின் ஆசைக்காக மேற்கொண்டதே, இந்த திருப்பதிப் பயணம்.... இங்கு வந்து பார்த்தவுடன் தான், தன் தவறு புரிந்தது....

காலையில், முகம் முழுவதும் கவலையும் டென்ஷனும் அப்பிக் கிடக்க, வயதான கண் தெரியாத தாய், மொழி தெரியாத மனைவி, அறியா வயசில் இரண்டு பெண் குழந்தைகளுடன் தரிசனத்திற்காகப் போனார்..

“சார், இவங்களுக்குக் கண் தெரியாதா”

“ஆமாம்.. சுத்தமாகத் தெரியாது”

“உடல் குறைபாடு உள்ளவர்களுக்கு க்யூ கிடையாது சார்... நேரே உள்ளே செல்ல தனி வழி”

“ஆனால் ஒருவர் மட்டுமே உடன் செல்லலாம்”

மகிழ்ச்சியும் துக்கமும் ஒருசேர ஏற்பட்டன, ஸுப்ரதோவிற்கு.. மொழிப் பிரச்சினையால் மிகவும் பயப்படும் மனைவி..

அவர் மட்டுமே தாயுடன் செல்ல வேண்டும்.

மனைவியைப் பார்த்தார்.

“பரவாயில்லை ஜி.. நீங்க மாஜியை அழைத்துச் செல்லுங்கள்... என்னால் தனியாக பெண்களுடன் க்யூவில் செல்ல முடியாது.. இன்னொருமுறை நாங்கள் பாலாஜியை தரிசனம் செய்து கொள்கிறோம்...."

சொல்லும்போதே மனைவிக்கு அழுகை முட்டிற்று..

கேட் திறக்கப்பட்டது… கேட்டைத் திறந்தவர், இவர்கள் குடும்பத்தை ஒரு பார்வை பார்த்தார்… ஒன்றுமே கேட்கவில்லை… எல்லோரையும் தாயுடன் உள்ளே அனுப்பி விட்டார்…

முடியாதவர்களுக்கான தனி தர்ஷன் என்பதால், தள்ளுமுள்ளு இல்லாமல் ஆனந்தமான தரிசனம்..

கமலிதேவி, “பாலாஜி” என்று உரக்கக் கூவியபடி, சந்நிதானத்தில், கன்னில் நீர் வழிய, அகக் கண்ணால் இறைவனை தரிசித்தபடி பரவசமாய் நின்றிருந்தார்…

ஸுப்ரதோ கேட்டார்……,
“இப்ப சொல்லுங்க…

பாலாஜி தர்ஷனுக்கு தாயைக் கூட்டி போவதாய் நான் நினைத்திருந்தேன்.. ஆனால் என் குடும்பம் முழுவதையும் தர்ஷனுக்கு அழைத்துச் சென்றது, என் தாய்.

நிச்சயமாக , நாங்கள் புறக் கண்ணால் தரிசித்ததை விட என் தாயார் அகக்கண்ணால் கடவுளை அதிகமாக உணர்ந்தார்…

இது தான் உண்மையான விஷன் [vision] , இல்லையா……”

முழு ஆடிட்டோரியத்தில் இருந்தவர்களும் கைதட்டலால் ஆம் என்றோம்….

ஆடிட்டோரியம் முழுக்க நிறைந்திருந்தது, கண் டாக்டர்கள்……

- ரோஹினி கிருஷ்ணா

துணுக்குகள்


பேங்குல பணம்
எடுக்கப்போகவே பயமா
இருக்கு...
/alwzsmle
-யாரோ
எங்க தமிழனா இருந்தா அத
ஷேர் பண்ணுன்னு வந்து
நின்னுடுவாங்களோன்னு...


10 வருஷத்துக்கு முன்ன பிரிந்து போன காதலிய
மறக்க முடியலனு புலம்புறானுங்க...
fb.com/ennanbendaaaa
fb.com/ennanbendaaaa
fb.com/ennanbendaaaa
ஆனா,10 நாளுக்கு முன்ன நம்மட்ட வாங்குன
கடனை மட்டும் மறந்திடுறானுங்க..!



தற்கொலைக்கு முயற்சிபவர்கள்
வெளிநாட்டு பூச்சி மருந்தை
பயன்படுத்த வேண்டாம்

அரளி விதையை சாப்பிட்டு
சாகவும்!!! 😂😂😂

உண்மையான தமிழன்
என்றால் உடனே ஷேர்
பன்னவும்!!!



தாராளவாதிகளின் போலி நிலைப்பாடு



அமெரிக்க அதிபர் டிரம்ப் தீவிரவாதம் அதிகமிருக்கும் நாடுகளிலிருந்து மக்கள் அமெரிக்கா வருவதைத் தடை விதித்துள்ளார் என்ற செய்தி வந்ததிலிருந்து தாராளவாதிகள் (liberals) எதிர்ப்பு பலமாக உள்ளது. தாராளவாதிகள் அந்தளவிற்கு நியாயவான்கள் என்றால் கிட்டத்தட்ட எழுபதாண்டுகளாக நீடிக்கும் இதே போன்ற ஒரு தடையைப் பற்றி ஏன் தலைமுறை தலைமுறையாக வாயை மூடிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லட்டும்.

இஸ்ரேல் குடிமகன்கள் யாரும் கீழ்க்கண்ட பதினாறு நாடுகளுக்குப் பயணிக்க முடியாது: ஸவூதி அரேபியா, குவைத், மலேஷியா, ஓமான், அமீரகம் (UAE), ஏமன், சிரியா,சூடான், ஈரான், ஈராக், பாகிஸ்தான், வங்கதேசம், லெபனான், ஸிரியா, லிபியா, ப்ரூனே.

ஏனென்றால் இந்த நாடுகள் இஸ்ரேல் என்று ஒரு நாடு இருப்பதை ஒப்புக் கொள்ளவில்லையாம். சரி பிரச்சனை இஸ்ரேல் குடிமக்களுக்குத்தானே, மற்ற நாட்டு மக்களுக்கு இதை பற்றி என்ன என்று கேட்டால் இந்த நாடுகளில் ஸவூதி அரேபியா, குவைத், மலேஷியா, ஸிரியா, ஈரான், லெபனான், லிபியா,

சூடான், ஏமன் ஆகிய எட்டு நாடுகள் எந்த நாட்டைச் சேர்ந்தவராக இருந்தாலும் ஒருவருடைய கடவுச்சீட்டில் (Passport) இஸ்ரேல் சென்று வந்ததற்கான விஸாவோ, அடையாளங்களோ இருந்தால் அவர்களை உளவாளிகளாகக் கருதித் தங்கள் நாட்டுக்குள் வருவதற்கு அனுமதி மறுப்பார்கள். இவற்றில் ஸவூதி அரேபியா, குவைத், மலேஷியா ஆகிய நாடுகள் பல இந்தியர்கள் பயணிக்க வாய்ப்புள்ள நாடுகள். இந்தப் பிரச்சனையைச் சமாளிக்க இஸ்ரேல் செல்ல விரும்புபவர்களுக்கு அந்நாட்டு அரசாங்கம் அவர்களுடைய கடவுச்சீட்டில் விஸாவை ஒட்டாமல் தனித்தாளாகத் தரவும் சம்மதிக்கிறது. ஆனால் இஸ்ரேல் இந்த நாடுகளுக்குச் சென்று விட்டு இஸ்ரேலுக்கு வருபவர்களுக்கு இது போன்றத் தடைகளை விதிப்பதில்லை.

நான் முதன்முதலாக அலுவலக ரீதியான பயணமாகச் சென்ற நாடு இஸ்ரேல். இந்த பிரச்சனையை விளக்கி விஸா தனித்தாளில் வேண்டுமா என்று கேட்டார்கள். வேண்டாம் விஸா கடவுச்சீட்டிலேயே இருக்கட்டும் என்று சொல்லி இஸ்ரேல் பயணம் செய்துவிட்டு வந்ததை இன்றுவரைப் பெருமையாக உணர்கிறேன்.

ஒரு வலதுசாரியாக மேற்கண்ட நாடுகள் இஸ்ரேலோடுத் தொடர்புடையவர்களுக்கு விதித்துள்ள தடைகளை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. அது அவர்களின் உரிமை என ஏற்றுக்கொள்ள முடிகிறது. ஆனால் இடதுசாரித் தாராளவாதிகள் பல காலமாக நீடிக்கும் இது போன்ற விஷயங்களைக் கண்டுகொள்ளாமல் ஏன் டிரம்ப் மேல் மட்டும் பாய்கிறார்கள்? ஊடகங்களில் வியாபித்திருக்கும் தாராளவாதிகளின் இத்தகைய பாரபட்சமான அணுகுமுறையால் உண்டாக்கிக்கொண்ட பொய்த்தோற்றத்தில், அவர்களே மெய் மறந்து கடைசி வரை அவர்கள் ட்ரம்பின் பலத்தைப் புரிந்து கொள்ளாமல் போனதுதான் பெரிய நகைச்சுவை.

- ஜெகன்நாத் ஸ்ரீனிவாசன்

என் சாட்சி எடுபடுமா?



இன்று இரவு 8 மணி இருக்கும் என நினைக்கிறேன்.

அப்போதுதான் கொலை செய்யப்பட்டாள் செலீனா.

கடந்த 2 வருடங்களாக வீட்டில் தனியாக இருந்து வந்தாள். பாதுகாப்புக்கு யாரும் இல்லை. பெற்றோர் அமெரிக்காவில் இருக்கிறார்கள். என்னை அவர்கள்தான் இங்கு அனுப்பி வைத்தார்கள்.

வருடத்திற்கு ஓரிரு முறைதான் நாங்கள் எல்லோரும் சந்திப்போம். அப்படி ஒரு சந்திப்பின்போதுதான் செலீனாவின் தந்தையின் நெருங்கிய நண்பரான போலீஸ் கமிஷனர் விக்ரமை முதன்முதலில் பார்த்தேன். அதற்குப் பிறகு அவரைப் பார்த்ததில்லை.

இவ்வளவு பெரிய பங்களாவிற்கு வாட்ச்மேன் ஒருவன்தான். சம்பத் அவன் பெயர். இரண்டு வருடங்களாக, அதாவது செலீனாவின் தந்தை இங்கு இருந்த காலத்திலிருந்தே வேலை பார்த்து வருகிறான், நம்பிக்கைக்குரியவன்.

செலீனாவின் நண்பர்கள் அவ்வப்போது வீட்டுக்கு வருவதுண்டு. எப்போது சந்தித்தாலும் ஆட்டம், பாட்டம், அரட்டை இருக்குமே தவிர மது, சிகரெட் போன்றவையெல்லாம் இருக்காது.

என்னதான் பணப்புழக்கம் அதிகமாக இருந்தாலும், இந்த விஷயத்தில் செலீனாவும் அவளின் நண்பர்களும் விசித்திரமானவர்கள் என நினைக்கிறேன்.

இன்று பகல், சுமார் 3 மணிஎன நினைக்கிறேன். செலீனாவின் செல்போனுக்கு ஒரு அழைப்பு வந்தது. அழைத்திருந்தது அவள் தந்தை. அவசரமாகப் பேசிவிட்டு வெளியே சென்றாள். நான் இங்கேயேதான் இருந்தேன்.

தனியாக இருக்க எனக்கு மிகவும் போர் அடித்தது. ஆனாலும் செலீனா திரும்பி வரும்வரை காத்திருக்கலாம் என நினைத்து, ஜன்னல் வழியாக வீட்டு வாசலையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

இரண்டு மணி நேரத்தில் வீட்டின் வெளிப்புற கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டது. செலீனாதான் தன் காரில் திரும்பி வந்திருந்தாள். சம்பத் கதவைத் திறந்து, காரில் இருந்த செலீனாவைப் பார்த்து சல்யூட் அடித்தான்.

காரை வீட்டுக் கூடத்திற்கு நேர் எதிரே பார்க் செய்துவிட்டு, முன் இருக்கையில் இருந்த பெட்டியை தன் இடது கையில் எடுத்துக் கொண்டு காரின் கதவைத் திறந்தாள். காரைவிட்டு இறங்கியதும் கதவை மூடி, ரிமோட் சாவியால் காரை பூட்டும் போது பெட்டி கீழே விழுந்தது.

பெட்டியில் இருந்த ரூபாய் நோட்டு கட்டுகள் கத்தை கத்தையாக கீழே விழுந்தன. அவற்றுக்கு பெட்டியிலிருந்து வெளியே வர அப்படி என்னதான் அவசரமோ, தெரியவில்லை.
எல்லாவற்றையும் நான் பார்த்துக் கொண்டிருந்தேன்.

“ச்சே..” என்று சொல்லி, பெட்டியைக் கீழே வைத்துவிட்டு, ரூபாய் கட்டுகளை எடுக்கத் தொடங்கினாள் செலீனா. அப்போது சம்பத் அங்கே வந்து அவளுக்கு உதவினான்.
ரூபாய் கட்டுகளை எடுத்து பொறுமையாக அடுக்கிக் கொண்டிருந்த செலீனாவிடம் கீழே விழுந்திருந்த சில கட்டுகளை எடுத்து, “இந்தாங்க மேடம். பாத்து பத்திரமா வெச்சுக்கோங்க” என்று கொடுத்தான்.

“தேங்க்ஸ்ங்க” என்று சொல்லிவிட்டு, பெட்டியை பூட்டி உள்ளே எடுத்துக் கொண்டு வந்தாள்.

இப்படி ஒரு நேர்மையான வாட்ச்மேன் நமக்குக் கிடைத்திருக்கிறாரே, அவருடைய சம்பளத்தை அடுத்த மாதம் முதல் உயர்த்திக் கொடுக்க வேண்டும் என செலீனா நினைத்திருக்க வாய்ப்புகள் உண்டு. சம்பத்திடம் நன்றி சொல்லும்போது அவள் முகம் இதைச் சொன்னது போல் இருந்தது.

தன் அறைக்குச் சென்று பெட்டியை வைத்துவிட்டு கைப்பேசியில் தன் தந்தையை அழைத்தாள்.

“டாடி, அங்கிள் கிட்டயிருந்து நீங்க சொன்ன மாதிரி சூட்கேஸ் வாங்கிட்டேன்”

மறுமுனையில் என்ன பேசினார் என்பது தெரியவில்லை.

“ஓ, அப்படியா? எப்போ வர்றீங்க?”

….

“ஐ யாம் வெரி ஹாப்பி டாடி. மம்மியும் வர்றாங்களா?”

….

“ச்சே, அவங்களும் வரலாமில்ல. ஒரு நாள் வந்துட்டு போறதுல என்ன ஆகிடப்போகுது?”

….

“தெரியும்தான். இருந்தாலும்…”

….

“சரி டாடி. சீ யூ நெக்ஸ்ட் வீக்”

….

அழைப்பைத் துண்டித்து, கூடத்தில் எனக்கு நேர் எதிரே இருந்த சோபாவில் உட்கார்ந்தாள். தன் தலைக்குப் பின்னால் இருந்த ஜன்னலை மூடி, என்னை இயக்க ஆரம்பித்தாள்.

எனக்குள் வெப்பம் அதிகரித்தது. கொஞ்ச நேரத்திலேயே என்னுள் மூழ்கினாள். பல விஷயங்கள் கற்றுக் கொண்டோம். நேரம் கடந்ததே தெரியவில்லை.

அவளுக்கு அயர்ச்சியாய் இருந்தது போலும். என்னை அணைத்த பின், அப்படியே தூங்க ஆரம்பித்தாள். நான் அவள் தூங்கும் அழகை ரசித்துக் கொண்டிருந்தேன்.

இரவு 8 மணி ஆகியிருந்தது. எழுந்து தன் அறைக்குச் சென்றாள். என்ன பார்த்தாளோ தெரியவில்லை, அந்த பெட்டியை எடுத்துக்

கொண்டு வந்து கூடத்தில் இருந்த டீப்பாயின் மேல் வைத்துவிட்டு, கதவைத் திறந்து வெளியே சென்றாள்.

“வாட்ச்மேன் இங்கே வாங்க” என்று சத்தமாகக் கூப்பிட்டுவிட்டு உள்ளே வந்தாள். எல்லாவற்றையும் நான் அமைதியாகக் கவனித்துக் கொண்டிருந்தேன்.

“இதோ வர்றேன் மேடம்” சம்பத்தின் பதில்.

உள்ளே வந்த சம்பத்தை கோபமாக முறைத்தாள் செலீனா.

“என்னாச்சு மேடம்?”

“எதுக்கு திருடறீங்க வாட்ச்மேன்?”

திடுக்கிட்டது சம்பத் மட்டுமல்ல, நானும்தான். சம்பது இப்படி செய்யக்கூடியவன் இல்லை என்றே நானும் நினைத்திருந்தேன்.

“நான் எதையும் திருடலையே மேடம்”

“பொய் சொல்லாதீங்க” செலீனாவின் குரல், அவளின் கோபம் அதிகரித்திருந்ததை அப்பட்டமாக சொல்லியது.

“என்ன மேடம், என்னையே சந்தேகப்படறீங்களே! நான் உங்க அப்பா இங்க இருந்த காலத்துல இருந்து இருக்கேன்” சமாளிக்கப் பார்த்தான் சம்பத்.

“நடிக்காதீங்க. நான் இன்னிக்கு எடுத்துட்டு வரும்போது, இந்த பெட்டியில அஞ்சு கோடி ரூபாய் இருந்தது. இப்போ பத்து லட்சம் குறையுது, ஒரு முழு கட்டையே காணோம். எங்கே போயிருக்க முடியும்?”

“நீங்க எடுத்துட்டு வரும்போது சரியா எண்ணினீங்களா மேடம்?” ஒப்புக் கொள்வது போல் தெரியவில்லை.
“திருடறதையும் திருடிட்டு, இப்போ எங்கிட்டயே கேள்வி கேக்கறீங்களா? போலீஸுக்குப் போன் பண்ணட்டுமா?” உச்ச ஸ்தாயியில் கத்தினாள் செலீனா.

உண்மையைக் கண்டுபிடித்துவிட்டாள், இனி பொய் சொல்லி ஏதும் ஆகப்போவதில்லை என்ற முடிவுக்கு வந்திருந்தான் சம்பத் என நினைக்கிறேன்.
விருட்டென்று செலீனாவை நெருங்கி, அவள் சுதாரிப்பதற்கு முன், அவளின் கழுத்தை நெறித்தான். துடித்தாள் அவள். சம்பத்தை தடுக்க நினைத்தேன், ஆனால் ஏதோ ஒன்று என்னைத் தடுத்தது. ஏதும் செய்ய முடியாதவனாய் அப்படியே இருந்தேன்.

சில நிமிடங்களில் செலீனாவின் உயிர் பிரிந்தது என நினைக்கிறேன். எனக்கு எதிரே தரையில் சரிந்து விழுந்தாள். பெட்டியைத் தூக்கிக் கொண்டு ஓட்டம் எடுத்தான் சம்பத்.

இப்போது மணி பனிரெண்டு. இது வரை வீட்டுக்கு யாருமே வரவில்லை. தரையில் பாவமாய் உயிரற்று கிடக்கிறாள் செலீனா. அவள் கண்கள் இன்னமும் என்னை நோக்கியே இருந்தன.

பத்து, பதினைந்து முறை செலீனாவின் செல்போன் ஒலித்தது. ஆனால் அவள் பதில் பேசும் நிலையில் இல்லை என்பது அழைத்தவருக்குத் தெரியுமா?

தன் மகளைத் தொடர்பு கொள்ள முடியாத காரணத்தினால் அவளுக்கு என்ன ஆயிற்று என்று பார்க்க, கூடிய விரைவில் தன் நெருங்கிய நண்பர் விக்ரமையோ, அல்லது வேறு யாரையோ அனுப்பி வைப்பார் அவளின் தந்தை என கணிக்கிறேன்.

எல்லா உண்மையும் தெரிந்த நானும் அப்படியே இருக்கிறேன். நடந்த சம்பவத்தை மறக்காமல், ஒரு வசனம்கூட மாறாமல் என்னால் சொல்ல முடியும்.

ஆனால் …….

காவல்துறை அதிகாரிகள் ஒரு வெளி நாட்டு ப்ளாஸ்மா டி.வியான என் சாட்சியை ஏற்றுக்கொள்வார்களா என்பது சந்தேகமே.

- சாய் சுந்தரராஜன்

ஹாஸ்யம்



மனநோய் மருத்துவர் : பையனுக்கு என்னம்மா ப்ராப்ளம்?

அம்மா : டாக்டர், பார்லே மில்க் பிக்கி சாப்பிடறான் , ஆனா மாரி பிஸ்கட் சாப்பிடமாட்டேங்கறான். கவலையாயிருக்கு டாக்டர்.

ம.ம: கவலைப் படாதீங்க! இதுக்கு PBB, ப்ரிஃபரென்ஷியல் பிஸ்கட் பிஹேவியர்ன்னு சொல்லுவோம்.

பையன் பார்லே பிடிச்சதானால பார்லே சாப்பிடலாம்!
இல்லை மாரி பிடிக்காததுனால பார்லே சாப்பிடலாம்!
அப்பாவால மாரி வாங்கித்தரமுடியல என்று கோபத்தால் வந்த சின்ன வயசு ட்ரௌமாவினால் பார்லே சாப்பிடலாம்!


அந்த மாரி பிஸ்கட் அவங்க அப்பாவுக்கு பிடிச்சிருக்குன்ற காரணத்தால் தன் கோபத்த வெளிப்படுத்த மில்க் பிக்கி சாப்பிடலாம். இத நாங்க PIJT, பாரன்ட் இன்ட்யூஸ்ட் ஜுவனைல் ட்ரௌமான்னு சொல்லுவோம்!

பையன் : அம்மா! தெரியாம பார்லே சாப்பிடுட்டேம்மா! இனிமே ஆயுசுக்கும் பிஸ்கட்டே சாப்பிடமாட்டேம்மா!

(ஒரு மனநல மருத்துவர் முன்பு ராஜ் டீவியில் பேசியதைக் கேட்டதாலும் இப்போது அவரது சில போஸ்ட்களையும் படித்ததால் வந்த பின் விளைவு!)

- தி.ரா.சங்கர்

கவிதை



என் இயக்கம் உன்னாலே
நீயின்றேல் சடமாவேன்
என்றான பின் பித்த நிலை
தானன்றி வேறென்ன சொல்ல..?
அதனால் தான் நீ
கால் முளைத்த மதுவோ?

என் இருவிழியும்
இளித்துக் கொண்டு
உன் பின்னே வந்தனவோ?
உன் வசமாகி
தம் இயல்பை மறந்தனவோ..?
காண்பதெல்லாம் நீயாகிப் போனதன்
மர்மமும் அது தானோ?

கால நேரம் இல்லாமல்
இலக்கற்ற மெய்மறந்த
புன்னகைகள் எப்போதும்..!
பித்தனாக்குபவளும் நீ..
தெளிவித்து புத்தனாக்குபவளும் நீ..!

- கருங்குளம் மா முருகன்


மகிழ்
MELBOURNE